**DECEMBER 2022** **P/ID 35315/PTL1E**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. யார் நிலமிசை நீடுவாழ்வார்?

2. எவை ஆகுல நீர?

3. 'குடம்பை தனித்தொழியப் புள் பறந்தற்றே' என்னும் உவமையால் உணர்த்தப்படும் கருத்து யாது?

4. எவை நான்கும் எஞ்சாமை வேந்தற்கு இயல்பு?

5. பீலி - பொருள் சுட்டுக.

6. வாரி என்றால் என்ன?

7. அரணின் உறுப்புகள் யாவை?

8. செறுநர் செருக்கறுக்கும் எஃகு எது?

9. வில்லோர் உழவர் - பொருள் கூறுக.

10. பொய்ம்மை மயக்கம் என்றால் என்ன?

11. சூதாடியிடம் அண்டாத ஐந்து எவை?

12. விதும்பல் - பொருள் சுட்டுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. 'இந்திரனே சாலும் கரி' - விளக்குக.

14. மனைமாட்சி குறித்து வள்ளுவம் மொழிவன யாவை?

15. 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' - விளக்குக.

16. செவிச் செல்வம், செல்வத்துள் செல்வம் ஆகுமாற்றை நிறுவுக.

17. அறிவுடையார் எல்லாம் உடையாராவாரா? விவாதிக்க.

18. 'எற்று என்று இரங்குவ செய்யற்க' என்று அறிவுறுத்தப்படுவது யாது?

19. அறிதொறும் அறியாமை கண்டற்றால் என்று களவியல் கூறுவதை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. திருக்குறளின் அமைப்பையும் சிறப்புகளையும் எடுத்துரைக்க.

21. திருவள்ளுவமாலையால் அறியலாகும் திருக்குறளின் பயன்பாட்டுத் தன்மையை எடுத்துரைக்க.

22. மானுட மேன்மைக்கு வள்ளுவம் வகுத்துரைக்கும் வழிமுறை யாது?

23. நல்லாட்சியின் பண்புகளாகத் திருக்குறள் நவில்வன யாவை?

24. இன்பத்துப்பாலால் அறியலாகும் உளவியல் செய்திகளை எடுத்துரைக்க.

———————